# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**<u>ஆணை நாள் - 13.05.2026</u>**

**<u>முன்னிலை</u>**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். CP 1980/F/2024</u>**

திரு.மு.ரவிசங்கர் .. புகார்தாரர்

/எதிர்/

பொதுதகவல் அலுவலர் /
கண்காணிப்பாளர்,
தமிழ்நாடு நகர்ப்புற
வாழ்விட மேம்பாட்டு வாரியம், கோட்டம்-7,
2/124, சர்தியாகராயர் சாலை,
தேனாம்பேட்டை,
சென்னை-600 018. .. பொது அதிகார அமைப்பு

**<u>ஆணை</u>**

இவ்வாணையத்தில் இன்று 13.05.2026 நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு.மு.ரவிசங்கர் அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள் 2012, விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பொது அதிகார அமைப்பின் சார்பாக, திரு.S.செல்வம், இளநிலை உதவியாளர், நிர்வாகப் பொறியாளர், கோட்டம்-7, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், தேனாம்பேட்டை, சென்னை-18 அவர்கள் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ், 22/01/2024 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில் தமிழ்நாடு நகர்பறி வாழ்விட மேம்பாட்டு வாரியம் எண்.2/124 சர் தியாகராய சாலை, தேனாம்பேட்டை, சென்னை-18. அலுவலகத்தில் தற்போது பணிபுரியும் அரசு அதிகாரிகள் ஒவ்வொருவரும் அவர்கள்

பணியில் சேர்வதற்கு முன்பும் பின்பும் அசையும் சொத்து, அசையா சொத்து சம்பந்தமான தகவல்களை அறிக்கையாக தங்கள் உயர் அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட்ட விவரங்கள் என்பன போன்ற 9 இனங்களில் தகவல்களைக் கோரியுள்ளார்.

3. அம்மனுவைப்பெற்ற பொதுத்தகவல் அலுவலர் 30.01.2024 தேதியிட்ட கடிதத்தின் மூலம் சட்டப்பிரிவு 6(3)ன் கீழ் மனுவினை மாற்றம் செய்துள்ளார். அதனை பெற்ற பொதுத்தகவல் அலுவலர் தகவல் வழங்கவில்லை. இந்நிலையில் தனக்கு தகவல் கிடைக்கவில்லை என மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(1)ன் கீழ் 26.02.2024 நாளிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டு அலுவலருக்கு தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் தகவல் வழங்கவில்லை. இந்நிலையில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 18(1)ன் கீழ் 04.04.2024 நாளிட்ட புகார் மனுவினை ஆணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள புகார் மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (13.05.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

4. இன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜரான பொதுதகவல் அலுவலர் மனுதாரர் 6(1) மனுவில் கோரிய இனங்கள் குறித்து 05.03.2024, 10.04.2024 25.09.2024 மற்றும் 20.11.2025 தேதியிட்ட கடிதத்தின் மூலம் தகவல்கள் வழங்கப்பட்டிருப்பதாக கூறி அதற்கான ஆவணங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. பொது அதிகார அமைப்பால் வழங்கப்பட்ட தகவல்கள் குறித்து மனுதாரரின் கருத்துக்களையும், வாதங்களையும் தெரிவிக்க அவருக்கு வாய்ப்பளிக்கப்பட்டிருந்தும் அவர் இன்றைய விசாரணைக்கு (13.05.2026) ஆஜராகத் தவறியுள்ளார். **எனவே, பொது அதிகார அமைப்பினால் 05.03.2024, 10.04.2024 25.09.2024 மற்றும் 20.11.2025 தேதியிட்ட கடிதங்கள் மூலம் தகவல்கள் வழங்கப்பட்டிருப்பதை உறுதி செய்து இந்த புகார் மனுவின் மீதான விசாரணையை இத்துடன் முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.**

**ஒம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 1980/F/2024</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுதகவல் அலுவலர் /
கண்காணிப்பாளர்,
தமிழ்நாடு நகர்ப்புற
வாழ்விட மேம்பாட்டு வாரியம், கோட்டம்-7,
2/124, சர்தியாகராயர் சாலை,
தேனாம்பேட்டை, சென்னை-600 018.

**<u>புகார்தாரர்:-</u>**

திரு.ரவிசங்கர்,
23, பாரதி நகர்,
மந்தைவெளிபாக்கம்,
சென்னை-600 028.

Copy to file: KR/PA